**பத்திரிக்கை செய்தி**

அறிவிக்கை எண்: 3/2020 விளம்பர எண்: 569

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

டேராடூனில் உள்ள இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரியில் 2021 ஜூலை பருவத்தில் மாணவர் சேர்க்கை தேர்வு

டேராடூனில் உள்ள இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரியில் ஜூலை 2021, பருவத்தில் சேருவதற்கான தேர்வு 2020-டிசம்பர் மாதம் 1 மற்றும் 2 தேதிகளில், சென்னை நகரிலும் இத்தேர்வு நடைப்பெற உள்ளது. இத்தேர்வு எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு ஆகிய இரண்டும் கொண்டதாக இருக்கும். எழுத்துத் தேர்வு, ஆங்கிலம், கணக்கு மற்றும் பொது அறிவு ஆகிய தாள்கள் கொண்டது. நேர்முகத் தேர்வு அறிவுக் கூர்மை மற்றும் தனித்தன்மையை ஆராய்வதாக இருக்கும். எழுத்துத் தேர்வில் தேர்வானவர்களுக்கு மட்டும் 06.04.2021 அன்று நேர்முகத் தேர்வு நடத்தப்படும். விண்ணப்பப்படிவம், தகவல் தொகுப்பேடு மற்றும் முந்தைய தேர்விற்கான வினாத்தாள் தொகுப்பை **"கமாண்டன்ட, இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரி, டேராடூன், உத்தரகாண்ட், அஞ்சல் குறியீட்டு எண் 248 003"** என்ற முகவரிக்கு விண்ணப்பித்து, **கமாண்டன்ட், இராஷ்ட்ரிய இந்திய ராணுவக் கல்லூரி, டேராடூன்** அவர்களுக்கு உத்ரகாண்ட், டேராடூன், டெல் பவன், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி கிளையில் (வங்கி குறியீடு - 01576) செலுத்தத்தக்க வகையில் பொதுப் பிரிவினர் ரூபாய் 600/- மற்றும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினர் ரூ.555/- கேட்புக் காசோலை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம், இணைய வழி (**website** www.rimc.gov.in) மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். **விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல் தொகுப்பேடு ஆகியன சென்னையிலுள்ள இத்தேர்வாணைய அலுவலகத்திலிருந்து விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படமாட்டாது.** விண்ணப்பதாரர்கள் தமிழ்நாட்டில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். மேலும் 01.07.2021 அன்று 11½ வயது நிரம்பியராகவும், 13 வயதை அடையாதவராகவும், அதாவது 02.07.2008-க்கு முன்னதாகவும் 01.01.2010-க்கு பின்னதாகவும் பிறந்திருக்கக்கூடாது. சேர்க்கையின்போது 01.07.2021-ல் அங்கீகரிக்கப் பெற்ற பள்ளியில் (Recognised School) ஏழாம் வகுப்பு படிப்பவராகவோ அல்லது ஏழாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராகவோ இருத்தல் வேண்டும். பூர்த்தியான விண்ணப்பங்களை, (இரட்டையாக) தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் சாலை, பூங்கா நகர், சென்னை - 600 003 என்ற முகவரிக்கு **30.09.2020** அன்று மாலை 5.45 மணிக்குள் வந்து சேர வேண்டும். மேலும் விவரங்களுக்கு www.rimc.gov.in - என்ற இணையதளத்தை பார்த்து பயன்பெறுமாறு தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/- வி.ஜெயசந்திரபானுரெட்டி
மாவட்ட ஆட்சியர்
கிருஷ்ணகிரி.

//உண்மை நகல்//

மாவட்ட ஆட்சியருக்காக
கிருஷ்ணகிரி.